# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

2423/35 - 2025 පෙබරවාරි මස 15 වැනි සෙනසුරාදා - 2025.02.15

*2423/35 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

MOD/DEF/HRM/01/AMD/REG.

*ச. வ. பி. 16/2016*

**(358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டம்**

(358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 161 ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**அநுர குமார திசாநாயக்க,**
பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
2025, சனவரி 12.

**ஒழுங்குவிதிகள்**

1993 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் 27 ஆந் திகதிய 799/7 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1989 ஆம் ஆண்டின் இலங்கை கடற்படை மகளிர் சேவை ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறாகத் திருத்தப்படுகின்றன:-

(1) 16 ஆம் ஒழுங்குவிதியில் -

(அ) (இ) என்னும் பந்தியில் "நாற்பத்தைந்து வயதையடைந்ததும் இளைப்பாறுதல் வேண்டும்" எனும் சொற்களுக்குப் பதிலாக "ஐம்பத்தைந்து வயதையடைந்ததும் (55)" எனும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்",


1A - G 43751— 06 (2025/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) (உ) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம்:-

"(உ) சேவையிலிருந்து இளைப்பாறும் ஆணைமீது நியமனம் பெற்ற அலுவலரொருவர் நிரந்தர ஒதுக்குப்படைக்கு மாற்றப்படலாம் என்பதுடன் அவர் அறுபது வயதை (60) அடையும் வரையில் அல்லது கடற்படை முனைஞன் தீர்மானிக்கின்றவாறான அத்தகைய குறுகிய காலப்பகுதி வரையில் நிலைத்திருக்கலாம்".

(2) 29 ஆம் ஒழுங்குவிதியின் காப்பு வாசகத்தில் -

(அ) (அ) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம்:-

"(அ) பெண் மாலுமியொருவரின் ஆரம்ப ஆள் திரட்டல் காலம் பதினைந்து (15) ஆண்டுகளை விஞ்சுதலாகாது என்பதுடன் அதன் பின்னர் அவர் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார்:

ஆயின் எவ்வாறாயினும், எவரேனும் பெண் மாலுமி குறிப்பிட்ட உயர் தொழிலொன்றுக்காக ஆள் திரட்டப்பட்டிருப்பின் அல்லது விசேட பயிற்சியொன்றுக்கு உட்பட்டிருப்பின், கடற்படை முனைஞன், அத்தகைய பணி ஓய்வுபெறுதலானது இலங்கை கடற்படையின் ஆர்வத்திற்கு தீங்கு விளைவிப்பதாகவிருக்கின்றதென கருதுவாராயின், அத்தகைய பெண் மாலுமி பதினைந்து வருட கால சேவை நிறைவின் மேல் பணி ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) (ஆ) பந்தியில் "சேவையில் மீளமர்த்தப்படலாம்" , எனும் சொற்களுக்குப் பதிலாக "இருபத்திரெண்டு வருடங்கள் (22)", எனும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்;

(இ) (இ) பந்தியில் "ஆதல் வேண்டும்", எனும் சொற்களுக்குப் பதிலாக "இருபத்திரெண்டு வருடங்கள் (22)", எனும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்;

(3) 37 ஆம் ஒழுங்குவிதியினை நீக்குவதன் மூலம்.

EOG 02 - 0134

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.